கொற்கையை சுற்றுலா மையமாக்கும் திட்டம்

10.00 மணி

*2262 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் தாலுகா, கொற்கையை சுற்றுலா மைய மாக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் இருக்கும் கொற்கையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்ன தாக கொற்கையிலே பாண்டிய மன்னர்கள் வாழ்ந்ததாகவும், கொற்கையிலே துறைமுகம் இருந்ததாகவும், பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த காலத்திலிருந்த சிற்பங்கள் அதே போன்று அவர் காலத்து செம்பு நாணயங்கள் தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று ரோமானியர் கூட கொற்கை துறைமுகத்திற்கு வந்து முத்துக்கள் வாங்கியதாக எல்லாம் வரலாற்றுச் சான்றுகள் கூறிக் கொண் டிருக்கின்றன. அப்படி வரலாற்று சான்று மிக்க அந்தக் கொற்கைத் துறைமுகத்தைச் சுற்றுலா மையமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, பாண்டிய மன்னர்கள் காலத்திலே அது துறை முகமாக இருந்தது என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை. ஆனால் இன்றைக்கு அந்தக் கொற்கை என்ற ஊர் கடற்கரை ஓரத்திலிருந்து சற்று தள்ளி இருக்கிறது. கடற்கரைக்கும் அதற்கும் சற்றும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் கூட ஒரு காலத்திலே கடற்பகுதியாக இருந்தது இன்றைக்கு ஏறத்தாழ 250 ஏக்கர் பரப்பளவிலே ஒரு குளமாக இருப்பதாக அறி கிறேன். நான் இன்னும் அதைப் பார்க்கவில்லை. அந்த இடத்தை நிச்சயமாக சுற்றுலாத் தலமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொற் கையிலே குளம் இருப்பதாகச் சொன்னார்கள். தாமிரபரணி பாசனத்தோடு இணைக்கப்பட்ட ஒரு பெரிய குளம் இருக்கிறது.

1990 மார்ச் 21]

ஆகவே அந்தக் குளத்திலே போட்டிங் விடுவதற்கு வசதியாக இருக்கும். அதே நேரத்திலே கொற்கையிலே பாண்டிய மன்னர்கள் காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிற விநாயகர் கோவிலில் 1981 ஆம் வருடம் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அங்கே அரசு விழா ஒன்று அமைச்சர்களால் கொண்டாடப்பட்டது. அதற்கு சுற்றுலாத் துறை மூலமாக 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி கூட வழங்கப்பட்டது. ஆகவே வருடா வருடம் கொற்கையிலே அந்த விநாயகர் கோவிலிலே விழா கொண்டாடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல் ராஜ் அவர்களே, பிள்ளையார் கோவில் கொற்கையிலே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக நிறுவப்பட்டதாகத் தாங்கள் கருதுகிறீர்களா ?

திரு. எஸ். டேனியல்ராஜ் : அதற்கான கல்வெட்டுகள் அந்தக் கோவிலிலே இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிள்ளையார் வந்ததே பல்லவர் காலத்திலேதான், பாண்டியர் காலத்திலே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தான் வாதாபியிலிருந்து பிள்ளையார் வந்தார் என்பது வரலாறு. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் டேனியல் ராஜ் தந்த தகவல்களை நான் குறித்துக் கொள்கிறேன். அந்தத் தொகுதியிலே நல்லதொரு விழாவினை ஏற்பாடு செய்ய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

*3521—திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் பகுதியை சுற்றுலா மையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, எந்த நகரையும் ''சுற்றுலா'' மையம் என்று இவ்வரசு அறிவிப்பதில்லை. ஆனால் மத்திய அரசின் உதவியுடன் கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரையில் சுற்றுலா வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.